No.C.12/2024 08.07.2024

# மறைமாவட்ட இறைமக்கள் பேரவை 2024
## ஆயரின் சுற்றுமடல்

**அன்பிற்கினிய சகோதரிகளே, சகோதரர்களே,**

எல்லா மக்களோடும் என்றுமே உறவில் வாழும் மூவொரு இறைவனின் அன்பும் அமைதியும் உங்களோடு இருப்பதாக! இணைந்து பயணிக்கும் திருஅவையாக நாம் உருவாகவும் செயல்படவும் நம் திருத்தந்தை பிரான்சிஸ் அழைப்பு விடுத்துள்ளதை நாம் நன்கறிவோம். அதையொட்டி அவர் முன்னெடுத்திருக்கும் ஆயர் மாமன்ற செயல்முறைகள் நிறைவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன. இச்சூழலில் திருத்தந்தையின் அழைப்பிற்கிணங்க நம் மறைமாவட்டத்திலும் 'இணைந்து பயணிக்கும் கோட்டாறு திருஅவையாக' என்னும் மையநோக்குடன் 2023ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடங்கி 'மறைமாவட்ட இறைமக்கள் பேரவை 2024'க்கான தயாரிப்புப் பணிகள் பல்வேறு நிலைகளாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தற்போது அது 'இறைமக்களிடம் கருத்து சேகரிப்பு' என்னும் முக்கியமானக் கட்டத்தை எட்டியுள்ளது.

இந்த மாதம் 21ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை தொடங்கி ஆகஸ்டு மாதம் 18ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமைவரை ஐந்து வாரங்கள் இறைமக்கள் அனைவரின் கருத்துகளைக் கேட்டறிந்து அவற்றை சேகரிக்கும் பணிகள் நமது மறைமாவட்டத்தின் அனைத்துப் பங்குகளிலும் நடைபெறவிருக்கிறது.

"எல்லாருக்கும் கடவுளும் தந்தையுமானவர் ஒருவரே; அவர் எல்லாருக்கும் மேலானவர்; எல்லார் மூலமாகவும் செயலாற்றுபவர்; எல்லாருக்குள்ளும் இருப்பவர்" (எபே 4:6) என்னும் பவுலடியாரின் கூற்றை உணர்ந்தவர்களாய் ஏறத்தாழ கால் நூற்றாண்டுக்குப் பிறகு நமது மறைமாவட்டத்தில் நடைபெறும் இந்த வரலாற்று நிகழ்வில் உங்கள் வழியாகவும் கடவுள் செயலாற்ற விரும்புகிறார். எனவே, இன்றைய சூழலில் நமது மறைமாவட்டத்தின் பணியும் வாழ்வும் சிறக்க உங்கள் கருத்துகளை திறந்த மனதுடன் பதிவுச்செய்ய இறைமக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

ஒவ்வொரு பங்கிலும் இந்தக் கருத்து சேகரிப்பானது அன்பியங்கள், பங்கு அருள்பணிப்பேரவை, பங்கில் செயல்படும் ஒவ்வொரு பங்கேற்பு அமைப்பிலும் தனித்தனியாக (திருத்தூதுக் கழகங்களின் ஒருங்கிணையத்தில் அல்ல) நடைபெறவிருக்கின்றது. ஞாயிறு திருப்பலி அறிவிப்பு நேரத்தில் பங்கு அருள்பணியாளர் அந்தந்த வாரத்திற்குரிய கருத்து சேகரிப்பை முறையே இறைநம்பிக்கை வாழ்வு, உறவும் உரையாடலும், பங்கேற்பு அமைப்புகளும் நிர்வாகமும், திருஅவையிலும் குடிமைச் சமூகத்திலும் நமது ஈடுபாடு, இதர முக்கியத் தளங்கள் என ஐந்து வாரங்களாக உங்களுக்கு அறிமுகம் செய்து நீங்கள் உங்கள்

கருத்துகளை ஆர்வமுடன் பதிவுசெய்ய அழைப்பு விடுப்பார்.

கருத்து சேகரிப்பை எவ்வாறு நடத்துவது என்பது குறித்து நமது பங்கிலிருந்துப் பயிற்சிப் பெற்றவர்கள் இந்தக் கருத்து சேகரிப்பை ஒவ்வொரு அன்பியத்திலும், பங்கு அருள்பணிப் பேரவையிலும், பங்கில் செயல்படும் அனைத்து அருள்பணிக்குழுக்கள், திருத்தூதுக் கழகங்கள் (பக்தசபைகள்), இயக்கங்கள், சங்கங்களில் தனித்தனியே நடத்துவார்கள். பங்கு அருள்பணியாளரும் இறைமக்கள் பேரவையின் பங்கு ஒருங்கிணைப்புக் குழுவினரும் பங்கில் நடைபெறும் இந்தக் கருத்து சேகரிப்பை தகுந்தமுறையில் திட்டமிட்டு ஊக்கப்படுத்துமாறு வேண்டுகிறேன்.

வழக்கமாகப் பெரும்பாலான நம் அன்பியங்களில் பெண்களே அதிகமாகப் பங்கேற்கின்ற நிலை இருக்கின்றது. அவ்வாறு அல்லாமல் இந்தக் கருத்து சேகரிப்பின் ஐந்து வாரங்களும் சிறப்பாக ஆண்கள், இளைஞர்கள், இளம்பெண்கள் என அனைத்து தரப்பினரும் ஆர்வமுடன் பங்கேற்க உங்கள் ஒவ்வொருவரையும் வேண்டுகின்றேன். இறைமக்கள் பேரவைக்கான தயாரிப்பின் இந்நிலையில் நம் அனைவரின் முழுமையான பங்கேற்பும் பங்களிப்பும் மிக முக்கியமென உணர்வோம். செவிமெடுத்தல், உரையாடுதல், தெளிந்து தேர்தல், முடிவு செய்தல் என்னும் செயல்முறையில் ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் பங்கேற்போம். நம் கோட்டாறு மறைமாவட்டத்திற்கான கடவுளின் விருப்பத்தைக் காணமுயல்கின்ற முயற்சியாகவும் ஆன்மீகப் பயிற்சியாகவும் இதனைக் காண்போம்.

வருகின்ற நவம்பர் மாதம் 15,16,17 ஆகிய மூன்று நாள்கள் நாகர்கோவில் ஹோலி கிராஸ் கல்லூரியில் வைத்து நடைபெறும் இறைமக்கள் பேரவையின் நிறைவுக் கூடுகையில் இறைமக்களின் கருத்துகள் வலுவாக எதிரொலிக்க நம்பிக்கையுடன் பங்குகளில் உரையாடுங்கள்!

கருத்து சேகரிப்பின் இந்த ஐந்து வாரங்களின்போது உலகத் திருஅவையாலும் தமிழகத் திருஅவையாலும் கொண்டாடப்படுகின்ற முக்கியமான நாள்களான உலக தாத்தா பாட்டிகள் நாள் (ஜூலை 28), இளைஞர் ஞாயிறு (ஆகஸ்டு 04), சிறைப்பணி ஞாயிறு (ஆகஸ்டு 11) ஆகிய சிறப்பு நாள்கள் கருத்து சேகரிப்பின் வாரங்களுக்குப் பின்பு அந்தந்தப் பங்கின் சூழலுக்கு ஏற்ப தவறாமல் கொண்டாடப்படுவதை உறுதிசெய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

தொடக்கத் திருஅவையில் திருத்தூதர்களோடு உடன்பயணித்த அன்னை மரியாவின் அருள்காவல் நமது மறைமாவட்டத்தின் இணைந்த பயணத்தில் உடனிருந்து நம் அனைவருக்கும் ஊக்கமளிப்பதாக!

கிறிஸ்துவின் மனநிலையில்

Sd/-

**+ ஆயர் நசரேன் சூசை**